நெல்லை மாலை முரசு

# குரு பெயர்ச்சி பலன்கள்



12.5.2012

# குரு பெயர்ச்சி பலன்கள்

## (17.05.2012 முதல் 29.05.2013)

குருபகவான் இந்த வருடம் 17.05.2012 நந்தன வருஷம் வைகாசி மாதம் 4-ந் தேதி வியாழக்கிழமை மாலை 5.00 மணிக்கு மேஷ ராசியிலிருந்து ரிஷப ராசிக்கு வருகிறார். ரிஷப ராசியில் 29.05.2013 வரை இருப்பார். குரு ஒரு ராசியில் ஒரு வருடம் இருப்பார்.

**குரு வக்கிரம் பெறும் காலம் :**

17.05.2012 முதல் 9.10.2012 வரை மேஷம், கடகம், கன்னி, விருச்சிகம், மகரம் இந்த ராசிகாரர்களுக்கு யோகமான காலமாக இருக்கும்.

10.10.2012 முதல் 6.2.2013 வரை வக்கரகதியில் இருப்பார். இந்த காலங்களில் மிதுனம், சிம்மம், துலாம், தனுசு, மீனம் இந்த ராசிகாரர்களுக்கு யோகமான காலமாக இருக்கும்.

இந்த வருடம் குருபகவான் பகை ராசியில் இருந்தாலும் சூரியன், குரு, கேது சேர்க்கை இருப்பதால் அரசாங்கத்திற்கு நன்மை உண்டு. ஆன்மீகத் துறையிலும் ஆன்மீகத்தில் மக்களுக்கு அதிகமான மோகம் இருக்கும். இறை பக்தி அதிகரிக்கும். ஆன்மீக, தெய்வீக அதிசயங்கள் நடைபெறும். தங்கம் விலை குறையும்.



**குருபகவான் வரலாறு :**

பிரம்மனின் புத்திரர்களில் ஆங்கிரீஸ் ஒருவராவார். இவருக்குப் பிறந்தவரே குரு, வியாழன் என்ற பெயரும், பிரகஸ்பதி என்ற பெயரும், தேவகுரு என்ற பெயரும் இவருக்கு உண்டு. இவர் பலவிதமான சாஸ்த்திரங்கள், கலைகள், வேதங்களை முறையோடு கற்று தேர்ச்சிப் பெற்றதால் தேவர்களுக்கெல்லாம் குருவாகி விளங்கி தேவகுரு என்ற பதவியைப் பெற்றார்.

குருபகவான் என்று அழைக்கப்படும் இவர், மிகவும் பொறுமை, சாந்தம் என்ற குணங்களை உடையவர். இவர் பார்வை சகல துன்பங்களையும் போக்கும். இவரின் மனைவியின் பெயர் தாரை. இவர்களுக்கு பிறந்த குழந்தைப் பெயர் கக்சன். இவரும் தந்தையைப் போல சிறப்பாக இருந்தார்.


கணித்தவர்:- ஜோதிடர்
நெல்லை
எஸ்.சங்கரசுப்பிரமணியன்




## குருபகவானுக்கு பிடித்தவை

வியாழ கிரகத்தின் நிறம் - மஞ்சள், பொன்நிறம்

ஜாதி - பிராமண ஜாதி

கிரக உறுப்புகள் - இதயம், வயிறு சம்பந்தமான உறுப்புக்கள்

கிரக நிலை - உயரே உள்ள கிரகம்

பார்வை - நேர்பார்வை 5, 7, 9

தானியம் - கொண்டைக்கடலை

மலர் - முல்லை

ஆடை வர்ணம் - பொன்நிறம், மஞ்சள்

சமித்து - அரசு

கிரக இடம் - நகரம், கிராமம்

பஞ்சபூதப் பிரிவு - ஆகாயம்

நாடி - வாதநாடி

திசை - வடக்கு

அதிதேவதை - பிரம்மா, தட்சிணாமூர்த்தி

வடிவம் - உயரமானவர்

உலோகம் - தங்கம்

இருக்குமிடம் - பொக்கிஷ அறை, பணம் இருக்கும் இடங்கள்

வலிமை - பகலில் வலிமை

பிடித்த உணவு - இனிப்பு

கிரகஸ்தலம் - திருச்செந்தூர்

கிழமை - வியாழன்

நட்சத்திரம் - புனர்பூசம், விசாகம், பூரட்டாதி

ரத்தினம் - புஸ்பராகம்

இவையெல்லாம் குருபகவானுக்கு பிடித்தவை.